


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## நவம்பர் - 2019

We Are Here..!! To Guide You..!!



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## நவம்பர் - 18.11.2019

We Shine Academy™
guiding you to get through


Main Office @

**Weshine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- விளையாட்டு நிகழ்வுகள்
- நியமனங்கள்
- முக்கிய தினங்கள்








The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344
www.weshineacademy.com

## விளையாட்டு நிகழ்வுகள்

- **தடகள கூட்டமைப்புகளின் சர்வதேச சங்கம்** (International Association of Athletics Federations (IAAF)) அதன் பெயரை அதிகாரப்பூர்வமாக மாற்றிவிட்டது. இப்போது அது **"உலக தடகளம்"** ("World Athletics") என்று அறியப்படும்.
    - **செய்தி துளிகள்**:
        - IAAF 1912 ஆம் ஆண்டில் சர்வதேச அமெச்சூர் தடகள கூட்டமைப்பு (International Amateur Athletic Federation) என நிறுவப்பட்டது மற்றும் அதன் பெயரை 2001 இல் "தடகள கூட்டமைப்புகளின் சர்வதேச சங்கம்" என்று மாற்றியது.

## நியமனங்கள்

- **இலங்கையில்** சனிக்கிழமை நடைபெற்ற **அதிபர் தேர்தலில்,** முன்னாள் பாதுகாப்புச் செயலரும், முன்னாள் அதிபர் மகிந்தராஜபட்சவின் சகோதருமான **கோத்தபய ராஜபட்ச வெற்றி** பெற்றார்.
    - **செய்தி துளிகள்:**
        - அதையடுத்து, நாட்டின் 8-ஆவது அதிபராக அவர் திங்கள்கிழமை (நவ.18) பொறுப்பேற்கிறார்.

- **உச்சநீதிமன்ற கொலீஜியத்தில் தமிழகத்தைச் சேர்ந்த பெண்**

**நீதிபதி ஆர்.பானுமதி இடம் பிடித்துள்ளார்.**

- ○ கொலீஜியத்தில் 13 ஆண்டுகளுக்குப் பிறகு பெண் நீதிபதி இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது. இவருக்கு முன்பு, நீதபதி ருமா பால் கொலீஜியத்தில் இடம்பெற்றிருந்தார்.
- ○ **செய்தி துளிகள்:**
  - ▪ தமிழகத்தைச் சேர்ந்த நீதிபதி ஆர்.பானுமதி கடந்த 2014-ஆம் ஆண்டு உச்சநீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார்.

- **உச்சநீதிமன்றத்தின் 47-ஆவது தலைமை நீதிபதியாக எஸ்.ஏ.போப்டே** 18.11.2019 **பதவியேற்கவுள்ளார்**. இவர், அயோத்தி நில விவகாரம், ஆதார் உள்ளிட்ட முக்கிய வழக்குகளில் தீர்ப்பளித்த அமர்வில் இடம்பெற்றிருந்தவர்.
  - ○ **செய்தி துளிகள்:**
    - ▪ அயோத்தி நில வழக்கில் அண்மையில் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கிய அரசியல் சாசன அமர்வில் எஸ்.ஏ.போப்டே இடம்பெற்றிருந்தார்.
    - ▪ தற்போது 47-ஆவது தலைமை நீதிபதியாக பதவியேற்கும் எஸ்.ஏ.போப்டே, 2021, ஏப்ரல் 23-ஆம் தேதி வரை அப்பதவியை வகிப்பார்.

## முக்கிய தினங்கள்

- **உலக மரபு வாரம் நவம்பர் 19-ஆம் தேதி முதல் 25-**ஆம் தேதி வரை நடைபெறவுள்ளதை முன்னிட்டு தமிழகத்திலுள்ள முக்கிய

We Shine Academy™

புராதனச் சின்னங்களைப் பார்வையிட பொது மக்களுக்கு இலவச அனுமதி அளிக்கப்பட உள்ளது.

- ஐக்கிய நாடுகள் சபை ஒவ்வொரு ஆண்டும் **நவம்பர் 17** அன்று **"சாலை போக்குவரத்து பாதிக்கப்பட்டவர்களுக்கு உலக நினைவு நாள்"** அனுசரிக்கிறது.
    - சாலை விபத்துக்களைக் குறைப்பதற்கான உலகளாவிய முயற்சிகளில் இந்த நாள் ஒரு முக்கியமான கருவியாக மாறியுள்ளது.

## திருக்குறள்

**குறள் எண் : 21**

அதிகாரம் : நீத்தார் பெருமை

குறள் பால் : அறத்துப்பால்

குறள் இயல் : பாயிரம்

**ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து**
**வேண்டும் பனுவல் துணிவு**

**விளக்கம் :** ஒழுக்கத்தில் நிலைத்து நின்று பற்று விட்டவர்களின் பெருமையைச் சிறந்ததாக போற்றி கூறுவதே நூல்களின் துணிவாகும்.